**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.320/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சேதுராஜன் | த–பெ | தமிழ்மாறன் |
| ஊர்: | : | புதுக்கோட்டை | சமயம்: | |
| வயது: | : | 37/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | மேலாளர் | மாவட்டம் | புதுக்கோட்டை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2025**

1ம் **எதிரி ஆஜர். 2ம் எதிரி இறப்பு. 3ம் எதிரி ஆஜர் இல்லை.**

**மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் புதுக்கோட்டையில் வசித்து போக்குவரத்து துறையில் பணியாற்றி தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணி செய்து வருகிறேன். காரைக்குடி பழைய பேருந்து நிலையத்தில் ராஜேந்திரன் என்பவர் எங்கள் நிறுவனத்தை சார்ந்த மீனாட்சி சுந்தரம் ஓட்டுநர் மற்றும் எங்கள் வழித்தட நடத்துநரையும் 10 வருடங்களுக்கு முன்பு பிப்ரவரி மாதம் ஒருநாள் நிறுவனத்திற்கு வந்து அடித்ததாக தெரிந்து கொண்டேன். மறுநாள் காலை இது தொடர்பாக போலீசார் மதியம் 1.00 மணியளவில் எங்கள் நிறுவனத்திற்கு வந்து என்ன நடந்தது என்று என்னிடம்தெரிந்து கொண்டு சம்பவ இடத்தில் ஆவணம் தயார் செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த பார்வை மகஜர் ஆவணம் அசாஆ 2.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கடந்த 15 வருடங்களாக காரைக்குடியில் உள்ள NNL தனியார் போக்குவரத்து நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். புகார்தாரரை தெரியுமா என்றால் நான் வேலை பார்த்த கம்பெனின் ஓட்டுநர் ஆவார். போலீசார் கையெழுத்து வாங்கியது எங்கு என்றால் சம்பவ இடமான கம்பெனியில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நிறுவனத்தின் முதலாளி தூண்டுதலின் பேரில் மீனாட்சி சுந்தரம் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்க தெரியும் 12 ம்வகுப்பு படித்துள்ளேன். உண்மையில் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்திருந்தால் என்ன

எழுதியுள்ளது என்று படித்து பார்த்துஇருப்பீர்கள் என்றால் சரியல்ல. புகார்தாரும் நானும் ஒரே நிறுவனத்தின் ஊழியர் என்பதால் எனது நிறுவனத்தின் முதலாளிக்கும் எதிரிக்கும் இருந்த முன் பகை காரணமாக கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.11 20:09:25 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி